விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 288 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 16 திங்கட்கிழமை (03.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழ்.பல்கலைக்கழகத்துக்கு சீனா 4.3 மில்லியன் ரூபாய் நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகளுக்கென சீனத் தூதரகத்தினால் 4.3 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த நிதியுதவியை ▷11

## இலங்கைக்கு அமெரிக்கா
## 12 மில்.பெறுமதியான மருத்துவ உதவி

(கொழும்பு)

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தலைமீட்டில் சுமார் 12 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள், உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம், அமெரிக்காவின் பிரபல மனிதாபிமான உதவி அமைப்புகளுடன் இணைந்து, இலங்கைக்கு மருந்து ▷11

## வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை காலமானார்



▷11

## நில ஆக்கிரமிப்பின் எதிரொலி
# கோணேஸ்வரர் ஆலயத்துக்கு இந்தியத் தூதுவர் விஜயம்



(திருகோணமலை)

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான நிலப்பரப்பை ஆக்கிரமிப்பதற்கு தொல்லியல் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்றைய தினம் கோணேஸ்வரர் ஆலயத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

## வீதியால் சென்றவரின் சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காக்கைதீவு பொம்மைவெளிப் பகுதியில் வீதியால் ▷11

## யாழ்.பல்கலையில்
## மூன்று அதிகாரிகள் பணி இடைநீக்கம்

(கொழும்பு)

பரீட்சைக் கடமைகளில் இருந்து தவறிய குற்றச்சாட்டுக்காக விசாரணைகள் முடிவடையும்வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக துறைத் தலைவர், விரிவுரையாளர் மற்றும் நிர்வாக உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் பல்கலைக்கழக பேரவை பணி இடை நீக்கம் செய்துள்ளது. ▷02

## 2 ஆயிரம் குடும்பங்களுக்கு புதிய வீடு
### ஜனாதிபதி

(கொழும்பு)

எதிர்வரும் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் ▷11

## யாழ்.கோட்டையில்
## திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும்
### மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்டை பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராக பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினருடன் இணைந்து நட ▷11

## வாள்வெட்டுக் குழுவின் முதன்மைச் சந்தேகநபர் கைது
### ஐவருக்கு பொலிஸார் வலைவீச்சு



▷11

## போதை வர்த்தகத்தை தடுக்க விரைவில் புதிய படைப் பிரிவு
### நீதியமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் அதன் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக புதிய படைப்பிரிவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுப்போம் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இளைஞர் சமூகத்தை நச்சுத்தன்மை ▷04

நடுவு நிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின்
ஆசிரியர் **சரவணபவ சர்மா** அவர்களின் தந்தையார்

அமரர்

**சிவஸ்ரீ வைத்தியநாதஐயர்**
**சுப்பிரமணியக் குருக்கள்**



அவர்கள் கடந்த 29.07.2022
அன்று இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5018)

பிரிவால் துயருறும்

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## கண்ணீர் அஞ்சலி

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர்
திரு. **சு.கோகுலன்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

**சுந்தரலிங்கம்**
**நாகபூசணியம்மா**



அவர்கள் கடந்த 07.09.2022
அன்று இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5019)

பிரிவால் துயருறும்

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## மூன்று அதிகாரி...

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பேரவை கூட்டத்தின் போதே மூவரையும் விசாரணைகள் முடிவடையும் வரை பணி இடைநீக்கம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மாதம் கலைப்பீட மாணவர்களின் ஒரு துறைக்கான பரீட்சைக்கு வினாத்தாளை தயார் செய்யாத காரணத்தால், பரீட்சைக்கு தோற்ற தயாரான நிலையில் வந்த மாணவர்கள், பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் திரும்பி சென்று இருந்தனர்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பல்கலைக்கழக மூதவையினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, மூதவையின் பரிந்துரையின் அடிப்படையில் பேரவை அது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக மூவரையும் விசாரணைகள் முடிவடையும் வரையில் பணி இடை நீக்கம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. (4-7,104)

## கண்ணீர் அஞ்சலி

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியை
திருமதி **ஜமுனா மகேந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

**சிவானந்தமலர்**
**விக்னேஸ்வரன்**



அவர்கள் கடந்த 07.09.2022
அன்று இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5020)

பிரிவால் துயருறும்

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## கண்ணீர் அஞ்சலி

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியை
திருமதி **மிதிலா ரமணன்** அவர்களின் மாமியார்

அமரர்

**செல்வராஜா**
**விமலாம்பிகை**



அவர்கள் கடந்த 28.08.2022
அன்று இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5017)

பிரிவால் துயருறும்

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமான நிலையம் செல்லும் பிரதான காபற் வீதிக்கு அருகாமையில்
- தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 750m தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1Km தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(12977)

தொடர்பு

**076 755 8606**


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வடிவேலு பாலசரஸ்வதி**

(பாலா)

பிறப்பு 12.05.1960 இறப்பு 24.09.2020

எங்கள் அன்பு மகள் பாலசரஸ்வதி எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது.
இருந்தாலும் இப்போதும் உமது நினைவுடனேயே வாழ்கின்றோம்.
உயிர் இருக்கும் வரை உம்மை மறக்க மாட்டோம்.
உமது ஆதமா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

4ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(C-5016)

உமது நினைவில் வாடும்
உமது குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 02 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ். நகரில் இருந்து 4 km தூரம்
- 1 பரப்பின் விலை 600,000/= ரூபாய் (ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை

(12977)

**077 288 0152, 077 148 8348**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 18 அடிப் பாதையுடன் நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- வீடுகள், திருமண மண்டபம் அமைக்க உகந்த சூழல்
- ஒரு பரப்பின் விலை 6 இலட்சம் (6,00,000/-) மட்டும்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 6 வரை

(12977)

**077 911 6983, 077 076 0389**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து 200 M தூரம்
- 20 அடிப் பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும்
- பார்வையிடும் நேரம் - காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை

(12977)

**077 874 8135**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 4 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12977)

தொடர்புகளுக்கு:- **077 288 0152**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் அழிந்து போகும் பண்பாட்டுச் சின்னங்கள்

## வரலாற்றுத்துறை பேராசிரியர் புஸ்பரட்ணம்

(யாழ்ப்பாணம்)

2,500 ஆண்டு காலமாக எமது வாழ்வியலோடு இணைந்திருந்த பண்பாட்டுச் சின்னங்கள் 1970 இன் பின்னர் அழிந்து போவதற்குக் காரணம் உலக மயமாக்கல், தகவல் தொழில்நுட்பம், நாடுகளுக்கிடையிலான நல்லுறவு என்பனவாகும் என யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

யாழில் நேற்று உலக சுற்றுலா தினத்தினை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்வு யாழ். கோட்டையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

காலமாற்றத்திற்கு அமைய எங்களை மாற்றிக் கொள்வது நல்லதுதான். அதேநேரத்தில் எங்களுக்குரிய அடையாளங்களைக் கைவிட்டு புதியவற்றைத்தான் வாழ்வியல் அம்சங்களாக பார்ப்பது எங்கள் இனத்தினுடைய பாரம்பரிய அடையாளங்களை நாங்களே தொலைப்பதாக மாறுகின்றது.

தென்னிலங்கையில் பல வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்களைப் போல், வட, கிழக்கு இலங்கையிலும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வரலாற்றுப் பழமை வாய்ந்த தலங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை சுற்றுலாவுக்குரிய இடங்களாக பார்க்கப்படவில்லை.

தற்போது திருக்கோணேஸ்வர ஆலயம் பிரச்சினைக்குரிய ஆலயமாக மாறுகின்றது. இந்த ஆலயத்தின் தொன்மையான வரலாறானது, இலங்கையின் எந்தவொரு இடத்திற்கும் கிடையாது என மேலும் தெரிவித்தார். (4)

# நெருக்கடியில் நாடு; அமைச்சர்களுக்கு சலுகைகள்

## பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் போது, இராஜாங்க அமைச்சர்களுக்கு வாகனம், எரிபொருள் கொடுப்பனவு உள்ளிட்ட சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன், வாகனத்திற்கு 300 லீற்றர் எரிபொருள் கொடுப்பனவும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

38 இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ள தற்போதைய அரசாங்கம், மற்றுமொரு அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க தயாராகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகரித்த மின் கட்டணத்தை செலுத்த முடியாமல் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கடும் நெருக்கடியை எதிர்நோக்கி வரும் நிலையில் அமைச்சர்களுக்கு மட்டும் அரசாங்கம் தன்னிச்சையாக சலுகை வழங்கி வருவதாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (4)

# சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்பு வட்டித்திட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்பு வட்டித் திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலுவை வைப்பு மற்றும் புதுப்பித்தல் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என இலங்கை மத்திய வங்கியால் வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த மாதம் 22 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய, உரிய பணிப்புரைகள் இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிலையான வைப்பாளர்களுக்கு 14.5 சதவீதமான வட்டி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது 15 சதவீத வட்டி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# யாழில் மகாத்மா காந்தியின் 153 ஆவது பிறந்தநாள் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் 153 ஆவது பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ். மாநகர பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர், அரசியல் சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள் மற்றும் அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது காந்தீயம் ஏடு யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசனால் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். (4-18-33-104)

# பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 1974 ஆம் ஆண்டு வரையிலும் சிறப்பாக இயங்கி வந்த பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மலர் அச்சிட்டு யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளது.

ஏற்கனவே கொழும்பிலுள்ள பழைய மாணவர்களால் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு கடந்த 25.09.2022 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இம்மாத நடுப்பகுதியில் அல்லது இறுதியில் பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டுவிழா மலர் வெளியீட்டை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடத்த உத்தேசிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் பரமேஸ்வராக் கல்லூரியின் யாழ்ப்பாணத்திலுள்ள பழைய மாணவர்களை பங்குபற்ற வேண்டும் என்று பழைய மாணவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனவே யாழ்ப்பாணத்திலுள்ள பழைய மாணவர்கள் உடனடியாக தங்களது பெயர், விலாசம், படித்த ஆண்டு, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களை குறுந்தகவல் மூலம் ரி.பேரின்பநாயகம் கொழும்பு கிளை தொலைபேசி இல. 077 192 0271, கனக நமநாதன் யாழ்ப்பாண கிளை தொலைபேசி இல. 077 667 5080 ஆகியோருக்கு அனுப்புமாறு பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்க யாழ். கிளையின் தலைவர் சட்டத்தரணி கனகநமநாதன் அறிவித்துள்ளார். (4)

# களியாட்ட விடுதிபோல் மாறியுள்ள சாவகச்சேரி பொதுச்சந்தை

(சாவகச்சேரி)

இலங்கையின் மிகப்பெரிய சந்தையாக ஒரு காலத்தில் திகழ்ந்த சாவகச்சேரிப் பொதுச்சந்தை நகரசபையின் பலவீனம் காரணமாக இன்று ஒரு களியாட்ட விடுதி போல் மாறியிருப்பதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச்சந்தையில் நகரசபை எந்த விதமான கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்தவில்லை.

பொதுச்சந்தை காலையில் துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் போன்றும் மாலையில் களியாட்ட விடுதி போன்றும் காணப்படுகிறது. சந்தைக்கான செயற்பாடுகளை அங்கு காண முடியவில்லை.

அத்துடன் மாலை வேளை சந்தையில் சிலர் மதுபானம் அருந்திவிட்டு அட்டகாசம் புரியும் நிலை காணப்படுகிறது.

மதுப்பிரியர்களின் நடமாட்டத்தால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

நகரசபை இதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-30)

# மானம்பூத் திருவிழா

(குப்பிழான்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த நவராத்திரி பூசை வழிபாடுகள் கடந்த 26 ஆம் திகதி மாலை ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

நவராத்திரியின் பத்தாம் நாளான மானம்பூத் திருவிழா (வாழைவெட்டு) நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

...........

(குப்பிழான்)

உரும்பிராய் காமாட்சி அம்பாள் என அழைக்கப்படும் ஸ்ரீ காளி அம்பாள் ஆலய வருடாந்த நவராத்திரியின் மானம்பூத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து காளி அம்பாள் அண்மையில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலயத்திற்கு ஊர்வலமாகச் சென்று அங்கு வாழைவெட்டுச் சங்காரமும் இடம்பெறும். (4-18)

# 10 போத்தல் கசி[illegible]டன் யாழில் ஒருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாதரவத்தை பகுதியில் 10 போத்தல் கசிப்புடன் 37 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே குறித்த சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும் கைப்பற்றப்பட்ட கசிப்பினையும் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினர், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ள நிலையில் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 12 . 1935 | 01 . 10 . 2022 |



## உயர்திரு. சி.க. இராசேந்திரன் (கிளாக் ஐயா)

(அகில இலங்கை சமாதான நீதவான் - ஓய்வுநிலை எழுதுவினைஞர் யா/தேவரையாளி இந்துக் கல்லூரி)

வதிரி அறிவகத்தைப் பிறப்பிடமாகவும் வதிரி இந்திராவாசத்தைப் புகுந்த இடமாகவும் கொண்ட உயர்திரு.சின்னப்பொடி கணபதிப்பிள்ளை இராசேந்திரன் அவர்கள் 01.10.2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கதிராசி தம்பதியரின் அன்புப் புதல்வனும் இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புச் சகோதரனும் ஜெயந்தி, சுகந்தி, மாலதி, பவந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரவெட்டி), ஜெயந்தன் (உரிமையாளர் - ஹம்ஷன் ஸ்ரோர்ஸ்), சுகந்தன் (உரிமையாளர் - SKR Works) ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பநாதன், லோகேந்திரன் (கட்டார்), இன்பராஜன், ரவி, லோகரஞ்சன், பைரவி (அத்தாய் விநாயகர் முன்பள்ளி ஆசிரியர்), சுஜனியா ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் தம்பிப்பிள்ளை, அமரர் சதானந்தன், அமரர் கிருஷ்ணானந்தன், விவேகானந்தன், கிருபானந்தன், ரூபானந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஜெயகாந்தன் (அதிபர் - யா/தாளையடி றோ.க.த.க.பாடசாலை), கலைவாணி, ஜெயந்திரா (உரிமையாளர் - Studio 10), அஞ்சலா, துஷ்யந்தன் (HNB பினான்ஸ் மைக்ரோ முகாமையாளர்), தீபிகா (சுகாதார உதவியாளர் யாழ்.போதனா வைத்தியசாலை), பவித்திரன், மயூரேகா (சுவிஸ்), பிறேம்குமார் (மின்னிணைப்பாளர்), ஜனனி (தம்பசிட்டி முன்பள்ளி ஆசிரியர்), நிர்த்திகா (பாரதி முன்பள்ளி ஆசிரியர்), சுஜித்திரன், நிதுர்சன், ஜனோசன், லோஜிதன், சப்திகா, சச்சின், ஜனோஜித்திரா, ஹம்சவர்த்தன், அஹர்சன், ஷோபினா ஆகியோரின் பாசமிகு பேரனும் சாய்சந்தர், தீப்ஷிகா, ஸ்ரீஹர்ஷித், சாய்ஹர்ஷவி ஆகியோரின் பாசமிகு பீட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.10.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 844 8399, 077 345 9417 (C-5022) தகவல்: குடும்பத்தினர்

## போதை வர்த்தக...

உள்ள போதைப்பொருள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பயன்படுத்துவதில் இருந்து தடுப்பதற்காக எடுக்கவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நீதி அமைச்சில் இடம் பெற்றது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், சட்டமா திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், போதைப்பொருள் பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்து செல்கின்றது. இதனை கட்டுப்படுத்துவதற்காக, போதைப்பொருள் விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதற்காக புதிய படைப்பிரிவொன்றை அமைக்க இருக்கின்றோம்.

அதேபோன்று இளம் சமூகத்தினர் போதைப்பொருள் பயன்படுத்துவதற்காக செல்வதை தடுப்பதை நோக்காகக்கொண்டு தயாரிக்கப்படும் தேசிய கொள்கைக்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

அத்துடன் நாட்டின் இளம் சமூகத்தினர் மத்தியில் அபாயகர ஔடத பயன்பாடு வேகமாக பரவி வருகின்றது. போதைப் பொருள் பயன்படுத்துபவர்களில் பெரும்பாலானவர்கள் 20-30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களாகும்.

இந்த நிலைமையை விரைவாக கட்டுப்படுத்தாவிட்டால், எதிர்வரும் சில வருடங்களுக்குள் இலங்கையில் இளம் பிரிவினரில் அதிகமானவர்களின் சுகாதார நிலைமை மோசமடைந்து குடும்ப வாழ்க்கை சீரழிந்து, ஒழுக்கமற்ற சமூகவிரோத செயல்களுக்கு பெருமளவில் ஈடுபடும் சமூக சூழல் உருவாகும் அபாயம் இருக்கின்றது என தெரிவித்தார். (4-7)



யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்க 2022 ஆம் ஆண்டுக்கான B பிரிவு அணிகளுக்கான தீவக வலய போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காரைநகர் இளம் தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் தீவகத்தின் 6 அணிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் காரைநகர் இளஞ்சுடர் அணியானது காரைநகர் இளம் தென்றல் அணியை வென்று சம்பியனாகியது. முதல் இரண்டு சுற்றுக்களை 25:23,25:20 என இளம் தென்றல் வெற்றி பெற அடுத்த மூன்று சுற்றுக் களையும் இளஞ்சுடர் அணியானது 25:16, 26:24, 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 3:2 என்ற செற் கணக்கில் வென்று சம்பியனாகியது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2709

யானுஷா




பக்த வக்சலன்




சிவதனுஷ்




தனுசன்




துவாரகா




சுரேஜிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முழுமையாக மூடப்படும் சிறுவர் புற்றுநோய்ப் பிரிவு

(கொழும்பு)

மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு மேலதிகமாக சிறுவர்களுக்கான ஒரேயொரு புற்றுநோய்ப் பிரிவு அமைந்துள்ள கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவை முழுமையாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருத்துவமனையின் சிறுவர் புற்றுநோய் மருத்துவமனை மூடப்பட்டு ஒன்றரை வருடம் கழிந்துள்ள நிலையில் அதனை திறப்பதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக அங்கு சிகிச்சை பெற்றிருந்த சிறுவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த சிறுவர் புற்றுநோய் பிரிவில் 10 சிறுவர்கள் வரை தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

இரண்டு விசேட மருத்துவ நிபுணர்கள் அனுபவம் பெற்ற பணிக் குழாமினர் கராப்பிட்டிய மருத்துவமனையின் சிறுவர் புற்றுநோய்ப் பிரிவில் கடமையாற்றியிருந்தனர். குறித்த சிறுவர் பிரிவில் எல்ல, வெல்லவாய, பதுளை, மொனராகலை, அம்பாறை மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சிறுவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் குறித்த சிறுவர் பிரிவு மூடப்பட்டதோடு, அதன்போது அங்கு 250க்கும் அதிகமான சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

சிறுவர் புற்றுநோய் பிரிவு மூடப்பட்டமையை அடுத்து குறித்த சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக மஹரகம மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். (நி)


## சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்

இல. 528 பலாலி வீதி, திருநெல்வேலி.

விஜயதசமி பூசையும், ஏடு தொடக்குதலும், புதிய மாணவர்களைப்பதிவு செய்தலும் : 05-10-2022 புதன்கிழமை காலை 8.30 மணி

2 + Play Group, 3+ Montessori, 4+ Pre School சிறுவர்களுக்கு உகந்த மிகப் பாதுகாப்பான சூழலில், சுதந்திரத்துடன் கூடிய மகிழ்ச்சிகரமான விளையாட்டு- அழகியல் வழிக் கற்றலும் குழந்தைகள் காப்பக சேவையும்- (7.00- 4.30)





" களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கை வரை பயிற்சி பெற்ற ஆசிரிய அம்மாக்களின் அரவணைப்பு, அர்ப்பணிப்பு "

ஆடல், பாடல், விளையாட்டு, கற்றல் வட்டங்கள், மணல்–நீர் விளையாட்டு, தசை நார் பயிற்சிகள், மொழித்தேர்ச்சி, முன் கணிதம் என்பவற்றினூடு ஆரம்பக் கல்விப் பாடசாலைக்குச் செல்வதற்கான அனைத்துத் தேர்ச்சிகளும் வழங்கப்படுகின்றன.

கலாநிதி. பா. தனபாலன்
நிபுணத்துவ ஆலோசகர்

திருமதி.கர்ணி தனபாலன்
பணிப்பாளர்.
T.P– 076 848 5213

05-10-2022 புதன் கிழமை விஜயதசமி அன்று காலை 8.30 மணிக்கு கலாநிதி.பா.தனபாலன் அவர்களால் ஏடு தொடக்கப்படும். உரியவர்கள் முற்கூட்டியே பதிவு செய்யவும் (12948)

"கல்விச் சேவையே கடவுள் சேவை"


# சவேந்திர சில்வாவுக்கான தடைவிதிப்பு தீவிரமாக ஆராய்கிறது பிரிட்டன்

(கொழும்பு)

முப்படைகளின் தலைமை அதிகாரியும் முன்னாள் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராகவும் ஏனைய இராணுவ வீரர்களுக்கு எதிராகவும் தடைகளை விதிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து பிரிட்டன் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் ஜெஸி நோர்மனை மேற்கோள்காட்டி "த ஐலன்ட" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் நடை பெற்றுவரும் நிலையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரம் உள்ளடங்கலாக இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை தமது அரசாங்கம் மிக உன்னிப்பாக மதிப் பாய்வு செய் துவருவதாகவும் அதன்படி "தடைவிதிப்பு" உள்ளடங்கலாக தம்வசமுள்ள இராஜதந்திர உத்திகளை எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்துவருவுதாகவும் அமைச்சர் ஜெஸி நோர்மன் தெரிவித்திருப்பதாக அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# பெற்றோல் விலை குறைந்தாலும் ஆட்டோ கட்டணங்கள் குறையாது

(கொழும்பு)

பெற்றோல் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் கட்டணங்களை குறைக்கப் போவதில்லை என முச்சக்கர வண்டி சாரதிகள் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கியு ஆர் முறையின் கீழ் எங்களிற்கு போதியளவு எரிபொருள் கிடைக்கவில்லை என சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

முச்சக்கரவண்டி சாரதிகளிற்கு வழங்கப்படும் வாராந்த எரிபொருள் அளவினை அதிகரிக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# இராசிபலன்

03.10.2022
புரட்டாதி 16, திங்கட்கிழமை
அட்டமி பிற்பகல் 4.17 மணிவரை

பூராடம் பின்னிரவு 12.48 மணிவரை
சுபநேரம் - 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் -7.32-9.02 மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதில் தவிர்ப்பது நல்லது, மனக்குழப்பம் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** மறைமுக எதிர்ப்புகள் மாறும், வழிபாடு சிறப்பினைத்தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும் பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுறு சுறுப்பாக செயற்படுவீர்கள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** பயணத்தால் பிரபலமானவர்களின சந்திப்பு இடம் பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பக்குவமாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்** பொது வா பாராட்டும் புகழும் கூடும், திடீர் பண வரவால் சந்தோஷம் அடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**மீனம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.

இதுவரை முழு நிம்மதியோடு வாழ்ந்தவர்கள் யாருமிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## பகைவனுக்கருள்வாய்!

(நேற்றைய தொடர்ச்சி)

என் வியாபாரம் நிலைத்து தொடர்ந்து நன்றாகத்தான் நடக்கிறது. அப்படி இல்லாவிட்டால் நான் கஷ்டப்பட்டுக் கொண்டு தானே இருந்திருப்பேன். ஜக்குவை நான் ஒரு போதும் நம்பமாட்டேன். என் தந்தையின் உயிரை வேண்டுமென்றே போக்கியவன் அவன். அவனா எனக்கு நல்லது செய்கிறான்? இல்லவே இல்லை. அவன் என் ஜென்ம விரோதி. அவனைப் பற்றி இனி நீ என்னிடம் பேசாதே" என்று கூறினான்.

அவன் மனைவியும் அதற்குப் பிறகு தன் கணவனிடம் ஜக்குவைப் பற்றி பேசவில்லை. ஆனால் சில நாட்களுக்குப் பின் ஒரு அதிசய சம்பவம் நடந்தது. ஜக்கு ஏதோ ஒரு வேலையாக சூர்யபுரத்திற்கு வந்தான். அப்போது அவ்வூரின் நடுத்தெருவில் ஒரு நல்லபாம்பு அவனைத் தீண்டிவிட்டது. அவன் உடனே கீழே விழ அவனைச் சுற்றிக் கூட்டம் கூடியது.

சிலர் வைத்தியரை அழைத்து வா என்றார்கள். வேறு சிலர் மந்திரவாதியிடம் அழைத்துப் போகலாம் என்றார்கள். எல்லாம் பேச்சோடு நின்றதேயொழிய யாரும் செயலில் ஈடுபடவில்லை. அப்போது அவ்வழியாக ஞானதீபன் வந்து கொண்டிருந்தான். ஜக்குவின் காலில் பாம்பு கடித்த இடத்தில் கட்டுப் போட்டு அவன் தன் வாயால் விசத்தை உறிஞ்சி எடுத்துத் துப்பினான். இவ்வாறு நாலைந்து முறை செய்த பின் ஜக்குவுக்கு நினைவு வந்தது.

ஆனால் ஞானதீபன் களைத்துப் போய் நினைவிழந்து விழுந்துவிட்டான். அது கண்டு எல்லோரும் என்ன செய்வதெனத் தெரியாமல் திகைத்தனர். அப்போது கூட்டத்திலிருந்து ஒரு வைத்தியர் வந்து ஜக்குவையும் களைத்துச் சோர்ந்து விழுந்த ஞானதீபனையும் தன் வீட்டிற்குக் கொண்டு போனார். ஞானதீபனும் ஜக்குவும் பிழைத்து விட்டார்கள்.

ஞானதீபன் மனம் மாறி ஜக்குவைக் காப்பாற்றியதாகச் சிலர் கூறினார்கள். வேறு சிலரோ ஞானதீபன் நல்லவன் ஆதலால் ஜக்குவைக் காப்பாற்ற முயன்றதாகக் கூறினார்கள். உயிர் பிழைத்த ஜக்கு தன்னை காப்பாற்றியவன் ஞானதீபன் என அறிந்து அவனிடம் நீ தான் எவ்வளவு உயர்ந்தவன். ஜென்ம விரோதியாக நீ என்னைக் கருதி வந்தபோதிலும் என்னைக் காப்பாற்றினாயே உன்னைப் பணிவுடன் வணங்குகிறேன் எனக் கூறி அவனது கால்களில் விழுந்து வணங்கினான்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# புத்தகக் கடை

(சிறுவர் பாடல்)



புத்தகம் வாங்கப் போனோம்.
புதிய கடை ஒன்றிற்கு
எத்தனை அழகிய வண்ணங்கள்
எல்லாம் வாங்க ஆசைதான்

சின்னக் கதைப் புத்தகம்
சிரிக்கும் பாவைப் புத்தகம்
என்னை நிற்க வைத்தன.
எடுங்கள் என்றார் அண்ணனும்

கதைகள் சொல்லும் படமுண்டு
கணிதம் சொல்லும் படமுண்டு
எல்லாம் எடுக்க ஆசைதான்
எப்படி வாங்கவே முடியும்?

தண்ணீர் பட்டதும் உடனே
தானாய்ப் படமும் தெரியுமே!
கண்ணைப் பறிக்கும் விதத்திலே
காணப் புத்தகம் இருந்தது.

எண்ணும் எழுத்தும் படிக்கவே
எத்தனை எத்தனை புத்தகம்
அண்ணா வாங்கித் தந்தாரே
அவற்றில் சிலவே எனக்காக.

## ஆன்றோர்கள் சொன்ன அற்புதப் பொன்மொழிகள்

- யாரிடத்தில் கல்வி கற்கிறீர்களோ அவரிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள். (நபிகள்நாயகம்)
- வெற்றி என்பது அவரவர் எண்ணுகிற எண்ணத்தைப் பொறுத்தே கிடைக்கிறது. (நெப்போலியன்)
- சொர்க்கம் தாயின் இரு பாதங்களுக்கு அடியில் இருக்கிறது. (நபிகள் நாயகம்)
- குழப்பம் செய்வது கொலையை விடக்கொடியதாகும். (திருக்குர் ஆன்)

# சிலப்பதிகாரம்

## நீதி கேட்டு நெடும்பயணம்




'பரிகாரம் செய்ய முடியாத பாவம் இது. இப்படி ஓர் அநியாயத்தைச் செய்ததன் மூலம் மன்னனின் செங்கோல் வளைந்துவிட்டது வெண்கொற்றக்குடையும் வாளும் வீழ்ந்தன. இந்த மன்னின் ஆட்சி அழிந்தது.'

'வீரமும் நீதியும் மிக்க இந்த அரசனை இப்படிப்பட்ட ஓர் இழிவான செயலைச் செய்ய வைத்தது எது?'

'செம்பொன் சிலம்பைக் கையில் ஏந்திய இந்தப் பெண் தெய்வத்தன்மை பொருந்தியவளாக இருக்கிறாள். இப்படிப்பட்ட பெண்ணுக்கு அநீதி இழைக்கப் பட்டிருக்கிறதே. இனி என்ன ஆகுமோ!'

இப்போது கண்ணகிக்குக் கோபம் மாறவில்லை. என்னை இங்கேயே இருக்கச் சொல்லித் தனியாக விட்டுப் போன என் கணவரைச் சேர்வது எனக்கு சிரமமில்லை ஆனால் அதற்கு முன்னால் என்னுடைய கோபம் தணிய வேண்டும். என் கோபம் தணிய வேண்டுமானால் அந்தக் கொலைகார வேந்தனைப் பார்த்து இந்தக் கொடுமைக்குக் காரணம் என்ன என்பதை அறிந்தாக வேண்டும்.

விசாரிக்காமல் ஒருவனைக் குற்றவாளி என்று தீர்ப்பு அளித்துத் தண்டனை தந்த கொடுமை நடந்திருந்தாலும், அதுவே மிகப் பெரிய குற்றமாக இருந்தாலும் அந்தக் குற்றவாளிக்குக்கூடத் தன் நிலையை விளக்க சந்தர்ப்பம் தரவேண்டும். என்று கண்ணகி நினைத்தாள் தீராத கோபத்துடன் அரண்மனை நோக்கி நடந்தாள்.

### மிரண்டான் வாயிற்காவலன்

பாண்டியன் மனைவி மிகுந்த கலக்கத்துடன் காணப்பட்டாள்.

இதைப் பார்த்த அவளுடைய தோழி என்ன ஆயிற்று அரசி? ஏன் இப்படி உங்கள் முகமெல்லாம் வெளுத்துப்போயிருக்கிறது? என்று விசாரித்தாள்.

நான் கண்ட ஒரு கனவுதான் காரணம் என்றாள் பாண்டியன் மனைவி. அதை நினைத்து மிகவும் பயமும் அதிர்ச்சியுமாக இருக்கிறேன்.

என்ன தேவி கனவிலும் நினைக்க முடியாத சந்தோஷமான வாழ்க்கை உங்களுடையது. நீங்கள் கனவைக் கண்டு பயப்படுவதா? அப்படி என்ன பெரிய கனவு அது?

அந்தக் கனவில் அரசனின் வெண்கொற்றக் குடையும் செங்கோலும் கீழே விழுகிற காட்சியைப் பார்த்தேன் என்றாள் அரசி.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்
# 50 ஆவது ஆண்டு பொன்விழா அழைப்பிதழ்

## ஆசிச்செய்தி



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தனது 50 ஆவது ஆண்டினை முன்னிட்டு பொன்விழா மலர் ஒன்றினை வெளியீடு செய்ய இருப்பது பெருமகிழ்வைத் தருகின்றது. கடந்த 50 ஆண்டுகால தங்களுடைய சமூகப் பணிகளை வரலாற்றுச் செப்பேடாக பதிவு செய்கின்றது வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம். இது ஒரு பாராட்டத்தக்க விடயமாகும். நல்லதொரு சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கு அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற சிறந்த நிறுவனமாக இது பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினுடைய செயற்பாடுகளை நான் நீண்டகாலமாக நன்கு அறிந்தவனாவேன். அது மாத்திரமல்லாது இவர்கள் தங்களுடைய பல செயற்திட்டங்களில் என்னையும் அழைத்து பங்குபெறச் செய்திருக்கின்றார்கள். இதனால் இவர்களுடைய செயற்பாடுகளை நேரிலே பார்த்துக் கண்டுகொண்டவன் என்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இந்த அமைப்பில் பணியாற்றுகின்ற ஒவ்வொரு அங்கத்தவர்களுடைய மனத்தூய்மையான பணிகளை என்னால் பார்க்க முடிகின்றது. தூய்மையான பணிகளே இவர்களுடைய வெற்றிக்குக் காரணமாக அமைகின்றது. நல்லதொரு சமூகத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக தங்களுடைய அனைத்து செயற்பாடுகளையும் இந்த அமைப்பிற்காக அர்ப்பணித்து தொண்டாற்றிக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. சிறப்பாக பாடசாலை மட்டங்களிலே இளையோருடைய நல்வாழ்வுக்காக அவர்களுடைய சுபீட்சமான நல் எதிர்காலத்திற்காக தொண்டாற்றிக் கொண்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். அத்துடன் இந்தப் பணியானது நல்ல பிள்ளைகளை உருவாக்குவதோடு மாத்திரமல்லாமல் பிள்ளைகளுக்கு வேண்டாதவைகளை சந்தித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பங்களை இவர்கள் தடுக்கின்றார்கள். இதனால் பிள்ளைகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றார்கள். இவர்களுடைய மகத்துவமான பணிகளுக்கு எல்லாம்வல்ல கல்வி கலைஞானத்தெய்வமாகத் திகழ்கின்ற சரஸ்வதிதேவியினுடைய திருவருள் என்றென்றும் துணைநிற்பதாக பொன்விழாவும் சிறப்பாக நடைபெற பொன்மலரும் சிறப்பாக வெளிவர வாழ்த்தி ஆசிர்வதித்து நிறைவு செய்து கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள், குருமுதல்வர்.**
**வீணாகான குருபீடம் - சித்தன் கேணி.**
**ஸ்ரீ சரஸ்வதிஅம்பாள்உபதேச திருக்கோவில்சண்டிலிப்பாய்.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் 50 ஆவது பொன்விழாவின் நிறைவில் மலரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சமாதானம், சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மதுவிலக்கல், புகை மறுத்தல் ஆகியவற்றை கொள்கையாகக் கொண்டிருக்கும் இவ் நல்லொழுக்க சம்மேளனம் அதனை நிலை நிறுத்துவதற்கு ஏதுவாக விளையாட்டுப்போட்டிகள் மற்றும் கலை நிகழ்வு களை நடாத்துதல், தலைமைத்துவ பயிற்சிகளை வழங்குதல்; இடர் காலநிலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குதல் ஆகிய பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றி மக்கள் மத்தியில் நல்லொழுக்க விழுமியங்களை எடுத்துரைப்பது போற்றுதற்குரியது.

குறிப்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுப் போட்டிகளை நடாத்துதல், வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள், கற்றல் உபகரணங்களை வழங்குதல், வீதியோர நாடகங்கள் மூலம் சமூகத்தில் பிரச்சாரங்களை மேற்கொண்டு நல்லொழுக்கம் தொடர்பான கருத்தியலை விளக்கி சமூகத்தை விழிப்புணர்வடையச் செய்வது பாராட்டுதல்களுக்குரியது.

பால்நிலை சமத்துவத்துடன் கூடிய நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் ஈடுபட்டு வரும் நல்லொழுக்க சம்மேளனம் தொடர்ந்து தனது பணிகளை மேற்கொள்ள வேண்டும். மலரும் பொன்விழாமலர் சிறப்புடன் வெளிவரவும் சமூக அக்கறையுடன் செயற்படும் சம்மேளனத்தினரையும் பாராட்டி என் நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

**க.மகேசன்**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச் செய்தி



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் பொன்விழாவினை வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1970 ஆம் ஆண்டில் காரைநகரில் முதன் முதலாக நல்லொழுக்க சங்கம் உருவாக்கப்பட்டு தொடர்ந்து உருவாக்கப்பட்ட பல சங்கங்களை ஒருங்கிணைத்து வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் உருவாக்கப்பட்டது. சமூகத்தில் மது, போதைவஸ்து, புகைத்தல் என்பவற்றைக் குறைப்பதோடு சகோதரத்துவம், சமாதானம் என்பவற்றினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இவ் அமைப்பு செயற்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் மது, போதைவஸ்து என்பவற்றால் ஏற்படும் தீமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக போட்டிகள், வீதியோர நாடகங்கள், ஊர்வலங்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்ற உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

இன்றைய காலத்தில் சமூகத்தில் பல்வேறு சீரழிவுகள் அதிகரித்து வரும் நிலையில் இவ் அமைப்பினது செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ் அமைப்பினை மேலும் வலுவூட்டுவதன் மூலமும் செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலமும் சமூகத்திலிருந்து இவற்றினை ஓரளவுக்காவது களைய முடியும் என நம்புகின்றேன்.

50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழாக் காணும் இந்நிறுவனம் மேலும் பல ஆண்டுகள் சிறப்புடன் செயற்பட்டு சமூகத்திற்கு சிறந்த சேவையினை வழங்க வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்.**

காலம்: 03.10.2022 திங்கட்கிழமை
காலை 9.00 மணி
இடம்: சங்கானை கலாசார மண்டபம்
தலைவர்: திரு.க.புஸ்பராசா அவர்கள்
(தலைவர், வ.பி.ந.சம்மேளனம்)

### ஆசியுரை

**சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்** அவர்கள்
(குருமுதல்வர், சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில், சண்டிலிப்பாய்)
**அருட்திரு.பாலதாஸ் பிறையன்** அவர்கள்
(பங்குத்தந்தை, புனித சலேசியார் ஆலயம், சங்கானை)

### பிரதம விருந்தினர்

**உயர்திரு.க.மகேசன்** அவர்கள்
(அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

### சிறப்பு விருந்தினர்கள்

**திருமதி.பொ.பிறேமினி** அவர்கள்
(பிரதேச செயலர், வலி-மேற்கு, சங்கானை)
**கலாநிதி ஆறு.திருமுருகன்** அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
**திரு.வி. காண்டீபன்** அவர்கள்
(பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
**வைத்திய கலாநிதி பொ.ஜெசிதரன்** அவர்கள்
(சுகாதார வைத்திய அதிகாரி, சங்கானை)
**வைத்திய கலாநிதி எஸ்.சிவசங்கர்** அவர்கள்
(முன்னாள் சம்மேளன ஆலோசகர்)
**வண.ரி.எஸ். யோசுவா அடிகளார்** அவர்கள்
(இயக்குநர், காவேரி கலாமன்றம்)
**திரு.தே.பிறேம்றாஜ்** அவர்கள்
(இணைப்பாளர், ஹெல்த்தி லங்கா)


### நிகழ்ச்சி நிரல்

- 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்.
- 50 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உணவுப் பொதி வழங்கல்.

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

நெறியாளர் குழு,
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்
சங்கானை.

## வாழ்த்துச் செய்தி



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து பொன்விழா மலரினை வெளியிடுவது குறித்து எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். உலகளாவிய ரீதியில் மதுபாவனை, புகைப்பிடித்தல் போன்ற தீய பழக்கங்கள் மனித குலத்திற்கான அச்சுறுத்தலாக மாறி வரும் வேளையில் அவற்றின் பாவனையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் விதமாக 1851 இல் அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட நல்லொழுக்க அமைப்பு காலப்போக்கில் எம் நாட்டின் வடபிராந்தியத்திலும் வேரூன்றித் தன் ஐம்பதாவது அகவையை எட்டியுள்ளது. மதுபாவனை, புகைப் பிடித்தல் போன்றவற்றின் தீமை பற்றித் தொடர்ச்சியான விழிப்புணர்வினைப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலமே அவர்களையும் அப்பழக்கத்தில் ஈடுபடாமல் தடுத்து அவர்களது குடும்பத்திலுள்ள ஏனையோரிடமிருந்தும் அப்பழக்கத்தை அகற்ற முயற்சி செய்ய முடியும். அவ்வாறான விழிப்புணர்வு நிகழ்வுகள் காலத்திற்குக்காலம் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்துவதற்கு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் முக்கிய பங்காற்றுகின்றது. விழிப்புணர்வுகளை மட்டும் நடத்தி விடாமல் தெரு நாடகங்கள் மூலமும் பொது அறிவுப்போட்டிகள் மூலமும் மது பாவனைக்கு எதிரான சிந்தனைகள் மாணவர் மனதில் விதைக் கப்படுகின்றன. ஒரு விடயத்தை அழுத்தமாகப் பதிவு செய்வதில் தெரு நாடகத்தின் பங்கு அளப்பரியது என்பதைப் புரிந்து கொண்ட விதத்தில் நல்லொழுக்க சம்மேளனம் தெரு நாடகங்கள் மூலமும் தன் சமூக உணர்வை வெளிக்காட்டியுள்ளது. இடைப்பட்ட காலங்களில் பல்வேறுபட்ட நிறுவனங்களின் நிதிஈட்டங்கள் மூலம் வாழ்வாதாரக்கடன் வழங்கல் செயற்பாட்டிலும் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஈடுபடுகின்றது. ஐம்பது வருடங்களை புகைத்தலுக்கும் மது போதைக்கும் எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுத்திய வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தொடர்ந்தும் தன் சேவையை மக்களுக்கு வழங்க என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.பிறேமினி பொன்னம்பலம்,**
**பிரதேச செயலாளர், வலிகாமம் மேற்கு.**

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியடைவது குறித்து நல்வாழ்த்து தெரிவிப்பதையிட்டு ஆனந்தம் அடைகிறேன். உயர்ந்த சிந்தனையோடும் பெரியோருடைய நல் ஆசியோடும் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பு 50 ஆண்டுகள் சமூகத்திற்கு பொருத்தமான செயற்பாடுகளை செய்து மக்களின் மதிப்பை பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது. இவ் அமைப்பை ஆரம்பித்தவர்கள் தொடர்ந்து இவ் அமைப்பை கட்டி வளர்ந்தவர்கள் அனைவருக்கும் இந்நாளில் பாராட்டுக்கள் உரித்தாக.

கிராமங்கள் தோறும் நல்லொழுக்க பண்புகளை வளர்த்து நற்பிரஜைகளை உருவாக்க வேண்டியது சமூகத்தின் கட்டாய கடன் ஆகும். அப்பணியில் அயராது உழைத்து வரும் நல்லொழுக்க சம்மேளனம் சூரிய சந்திரன் உள்ள வரை தம் பணியைத் தொடர இறைவனை பிரார்த்தித்து மீண்டும் நல்லாசி கூறி அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**

(12929)

## ஆசிச்செய்தி



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் பொன்விழா காண்பது மகிழ்ச்சி. ஒரு குடும்பம் நல்லொழுக்கமுள்ளதானால் அந்தக் குடும்பம் சார்ந்த சமூகம் எழுச்சி பெறும். சமூகம் உயர்ச்சியடைந்தால் நாடு முழுநிறைவை அடையும். இதற்கு அடிப்படையில் அமைய வேண்டியது தனிமனித நல்லொழுக்கம்.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" ஒழுக்கம் நிறைந்த மனிதன் உயிரோடு இருப்பவன். ஒழுக்கம் கெட்டவர் உயிர் அற்றவராக அதுவும் வாழ்ந்தும் எந்த நன்மையும் இல்லாதவர்களாக இருப்பர்.

அந்த வகையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் மேற்கொள்ளும் ஒழுக்க போதனை, வாழ்வாக்கல் செயற்பாட்டிற்கு தலை வணங்குகின்றேன். சமாதானம், சகோதரத்துவம் என்பவற்றை நேர்மையோடும் நீதியோடும் செயற்படுத்தி மனித முன்னேற்றத்தின் ஊன்றுகோலாக இவர்கள் செயற்படுவது இரட்டிப்பு மகிழ்ச்சி.

விளையாட்டு, கலை நிகழ்வுகள் ஊடாக இளைஞரை, யுவதிகளை, பிள்ளைகளை நல்ல ஒழுக்க சீலர்களாக மாற்றும் துடிப்பான பணியை இச்சம்மேளனம் தொடர்ந்து ஆற்றுவது பெருமைக்குரியது. உன்னதமான பணியின் மேன்மையை இவர்கள் நிறைவாகச் செய்ய மனமார ஆசித்து நிற்கின்றேன். பணி தொடர வாழ்த்து கின்றேன்.

**அருட்திரு பாலதாஸ் பிறையன்**
**பங்குத்தந்தைபுனித சலேசியார் ஆலயம் சங்கானை.**

## பொன்விழா மலர் மலர்ந்து மணம் வீச வாழ்த்துகின்றேன்



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் பொன் விழாவை முன்னிட்டு வெளிவரும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளராக வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

புகைத்தல், மதுவிலக்கல், சமாதானம், சகோதரத்துவம், அபிவிருத்தி எனும் விடயப்பொருட்களை நோக்கங்களாகக் கொண்டு செயற்படும் சம்மேளனம் தாம் நடந்துவந்த பாதையை எமது சமூகத்திற்கு வெளிப்படுத்தும் ஆவணமாக இம்மலரை வெளியிடுவது போற்றுவதற்குரியது.

புகைத்தல் மற்றும் மதுபாவனையின் தீங்கையும் மறுபுறம் அதன் பணச் செலவினையும் விழிப்புணர்வுடன் வெளிக்கொணரும் இச் சம்மேளனம் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கான வெகுமதிகளையும் பாராட்டுக்களையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

சமூகமயமாக்கலின் செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் எதிர்கால தலைவர்களை ஆளுமை மிக்கவர்களாக்குவதில் பங்குதாரர்களாக இருப்பதும் சிறப்புக்குரியது.

இச் சம்மேளனமானது ஏனைய சமூக நிறுவனங்களுடன் இணைந்து வசதிகள் குறைந்த குடும்பங்களுக்கு அசாதாரண சூழ்நிலைகளில் உதவிகள் செய்து வருவதும் நல்லொழுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நாடகங்கள், ஊர்வலங்களை மிகவும் சிரத்தையாக வருடந்தோறும் நடத்துவதும் வியந்து மெச்சுதற்குரியது.

பொன்விழா மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துவதுடன் நல்லொழுக்க சம்மேளனத்தின் பணி மென்மேலும் உயர்வடைந்து செல்ல இறையருள் கிட்டட்டும் என வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**வி.காண்டீபன்**
**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## வாழ்த்துச் செய்தி



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் பொன்விழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நல்லொழுக்க சம்மேளனங்களை ஒன்றிணைத்து வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் என்னும் அமைப்பு 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் பிரதான கொள்கைகளாக புகைத்தல், மதுவிலக்கல், சமாதானம், சகோதரத்துவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இவற்றை வலியுறுத்தி பிரச்சார நடவடிக்கைகள் மூலம் தனது பணியை தொடங்கியது. அத்துடன் விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் மூலமும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இச்சம்மேளனம் 41 நல்லொழுக்க சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது. இச் சம்மேளனம் காலத்தின் தேவையறிந்து யுத்த சூழ்நிலை, இடப்பெயர்வுகளின் போதும் போருட் நிறுவனத்துடன் இணைந்து பல சமூகப்பணிகளை மேற்கொண்டமை பாராட்டுதற்குரியது. இச்சம்மேளனம் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த போதும் தனது சமூகப்பணிகளை ஆற்றியமை மிகவும் போற்றுதற்குரியது. இதுமட்டுமன்றி காலத்தின் தேவைக்கேற்ப போதைப்பொருள் பாவனைக்கெதிராகவும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றமை மிகவும் உன்னதமான பணியாகும். எமது சிறுவர்கள், இளைஞர்கள் வழி தவறாது, நெறி தவறாது சமூகத்தில் உன்னத நிலையை அடைய வேண்டுமென்ற இலட்சியத்தில் உறுதியாகவுள்ளது.

இன்றைய நிலையில் இவ்வாறான பணியில் ஈடுபடும் சம்மேளனத்தின் அங்கத்தவர்களின் உன்னத பணியை பாராட்டுகின்றேன். இவர்கள் அயராது உழைத்து வருகின்றமை எல்லோருக்குமே முன்மாதிரியானதாக அமைந்துள்ளது.

இச்சம்மேளனம் விழிப்புணர்வு கருத்தரங்குகள், ஊர்வலங்கள், நாடகங்கள், தெருக்கூத்துக்கள் போன்ற வழிமுறைகளின் மூலம் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றது. இச்சம்மேளனத்தின் பொன்விழா சிறப்புற அமையவும் அதன் தன்னலம் கருதாத சமூகத்திற்கு ஆற்றுகின்ற உன்னதமான பணியை போற்றுவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சம்மேளனம் பொன்விழா மட்டுமன்றி பல நூற்றாண்டு விழாக்களையும் காண வேண்டுமென்றும் அவர்களின் பணி மென்மேலும் சிறப்புற வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**நா.வேதநாயகன்**
**முன்னாள் அரச அதிபர், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

**கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 90**

நேட்டோ கிழக்கு நோக்கி விரிவடையாது என்று 1990 இல் அளித்த உத்தரவாதத்தை அமெரிக்கா மீறி விட்டதாக ஜனாதிபதி புடின் நீண்ட காலமாக வாதிட்டார். ஆனால், ரஷ்யாவின் கூற்றுகளை நிராகரிக்கும் நேட்டோ அமைப்பு, ரஷ்யாவுடனான எல்லையை பகிரும் தமது உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை வெகு குறைவு என்றும் அவற்றுடனான தமது கூட்டணி தற்காப்பு அடிப்படையிலானது என்றும் தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உக்ரைனியர்கள் தங்கள் "ரஷ்ய ஆதரவு" ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றியபோது, யுக்ரைனின் தெற்கு கிரைமிய தீபகற்பத்தை தன்னுடன் ரஷ்யா இணைத்துக் கொண்டது. கிழக்கு உக்ரைனின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிய தமது ஆதரவு பிரிவினைவாதிகளையும் ரஷ்யா ஆதரித்தது.

அந்த விவகாரத்தில் நேட்டோ தலையிடவில்லை. ஆனால் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நேட்டோ அதன் படைகளை முதல் முறையாக நிலைநிறுத்தி எதிர்வினையாற்றியது. இந்தப் படைகள் நேட்டோவின் பிராந்தியத்தை ரஷ்யா ஆக்கிரமிக்க முனைந்தால், அந்த நிலைமையை செய்லிழக்கச் செய்யும் வகையில் இந்த நேசப் படைகளின் தன்மை வடிவமைக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு போர்த் தளபாட துருப்புகள் அடங்கிய நான்கு படையணிகளை எஸ்டோனியா, லாத்வியா, லிதுவேனியா, போலாந்து ஆகியவற்றில் நேட்டோ கொண்டிருக்கிறது.

**உக்ரைனின் தெற்கு கிரைமிய தீபகற்பத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது முதல் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நேட்டோ அதன் படைகளை முதல் முறையாக நிலைநிறுத்தி எதிர்வினையாற்றியது.**

**உறுப்பு நாடுகளின் வான் எல்லைக்குள் ரஷ்யப் போர் விமானம் ஊடுருவினால் அதை தடுக்கும் வகையில் வான் கண்காணிப்பையும் பால்டிக் நாடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ விரிவுபடுத்தியுள்ளது. இந்தப் படைகள் வெளியேற்றப்பட வேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது.**

கிரைமிய தீபகற்பத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்ட பின் நேட்டோ பின்வரும் சில நடவடிக்கைகளை எடுத்தது.

நேட்டோவின் கிழக்கு எல்லைகளை வலுப்படுத்த அமெரிக்கா கிட்டத்தட்ட 3,000 கூடுதல் துருப்புக்களை போலந்து மற்றும் ருமேனியாவுக்கு அனுப்பியிருந்தது. மேலும் போரை எதிர்கொள்ளும் 8,500 துருப்புக்களையும் தயார் நிலையில் வைத்துள்ளது. எனினும், உக்ரைனுக்குள் அவற்றை அனுப்பும் திட்டத்தை இன்னும் நேட்டோ கொண்டிருக்கவில்லை.

இதேவேளை, உக்ரைனுக்கு ஜாவெலின் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், ஸ்டிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உட்பட 200 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள ஆயுதங்களை நேட்டோ அனுப்பியிருந்தது.

இது தவிர, அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களை உக்ரைனுக்கு பிற நேட்டோ நாடுகள் அனுப்பவும் அனுமதித்துள்ளது. உக்ரைனுக்கு குறுகிய தூர இலக்கை தாக்கும் திறன் கொண்ட 2,000 பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை பிரிட்டன் வழங்கியுள்ளது. மேலும் போலந்திற்கு கூடுதலாக 350 துருப்புக்களையும், எஸ்டோனியாவுக்கு 900 கூடுதல் துருப்புக்களை அனுப்பி தமது பலத்தை இரட்டிப்பாக்கியிருக்கிறது பிரிட்டன்.

இது தவிர, தெற்கு ஐரோப்பாவுக்கு பிரிட்டன் விமானப்படையின் மேலதிக போர் விமானங்களையும் கிழக்கு மத்திய தரைக்கடலில் உள்ள நேட்டோ போர்க்கப்பல்களுக்கு உதவியாக கடற்படை கண்காணிப்பு கப்பல்களையும் பிரிட்டன் அனுப்பியிருக்கிறது.

உக்ரைனில் ரஷ்ய படையெடுப்பால் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டால், 1,000 துருப்புக்களை ஆயத்த நிலையில் இருக்குமாறும் பிரிட்டன் உத்தரவிட்டுள்ளது. டென்மார்க், ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்தும், கிழக்கு ஐரோப்பா மற்றும் கிழக்கு மத்திய தரைக் கடலுக்கு போர் விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்களை அனுப்பியிருக்கிறது.

ருமேனியாவில் நேட்டோ போர்க் குழுவை வழிநடத்த அங்கு தமது படைகளை அனுப்ப பிரான்ஸ் திட்டமிட்டுள்ளது. ஆனால் இதன் விபரங்களை விரிவாக பட்டியலிட இன்னும் பல வாரங்கள் ஆகும் என்று நேட்டோ கூறியிருக்கிறது.

**ரஷ்யா - உக்ரைன் இடையேயான மோதல்.**

சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்த பிறகு சோவியத் யூனியன் அமைப்பில் இருந்த மிகப்பெரிய நாடுகளில் ஒன்றான உக்ரைன் தனி நாடாக விடுதலையானது.

(தொடரும்)

# கால்பந்து அரங்கில் கலவரம் நெரிசலில் சிக்கி 127 பேர் பலி

## இந்தோனேஷியாவில் துயரம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கால்ப்பந்தாட்ட போட்டியில் ஏற்பட்ட மோதலில் சிக்கி பொலிஸார் உட்பட 127 பேர் உயிரிழந்துள்ளனர்.

கலவரத்தில் ஈடுபட்ட ஆதரவாளர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியதால் விளையாட்டரங்கை விட்டு மக்கள் வெளியேற முற்பட்ட போது இந்த நெரிசல் ஏற்பட்டது.

பெர்செபயா சுரபயா அணிக்கு எதிரான போட்டியில் அரேமா அணி 3-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்ததை அடுத்து மைதானத்தில் மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த நெரிசல் காரணமாக 180 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்த நாட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விசாரணை முடியும் வரை குறித்த தொடரின் அனைத்து போட்டிகளையும் நிறுத்த வேண்டும் என ஜனாதிபதி ஜோகோ விடோடோ உத்தரவிட்டுள்ளார். (நி)

# பின்வாங்கிய ரஷ்யப் படைகள்

## லைமானில் கொடியை நாட்டியது உக்ரைன்



(கீவ்)

கிழக்கு உக்ரைனிய நகரமான லைமான், உக்ரைனியப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறியுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி விளாடிமிர் புடின் நான்கு உக்ரைனிய பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பதாக அறிவித்த நிலையில் இந்த செய்தி வெளியாகியுள்ளது.

இருப்பினும் ஆயிரக்கணக்கான ரஷ்ய துருப்புகள் அப்பகுதியை முதலில் சுற்றி வளைத்ததாகவும் தற்போதும் அங்கு தமது படைகள் இருப்பதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் லைமானில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து ரஷ்ய துருப்புக்களும் கொல்லப்பட்டதாக உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் நகரத்தில் உக்ரைனியக் கொடி பறந்து கொண்டிருந்தாலும், அங்கு இன்னும் சண்டை நடந்து கொண்டிருப்பதாக உக்ரைனிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 300 | 280 |
| தக்காளி | 200 | 260 | 260 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 260 | 250 | 160 | 200 |
| கோவா | 400 | 400 | 400 | 450 |
| கரட் | 320 | 380 | 400 | 450 |
| பூசணி | 180 | 150 | 160 | 200 |
| புடோல் | 200 | 220 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 160 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 160 | 250 | 300 | 320 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 500 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 450 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 380 | 400 | 450 |
| முள்ளங்கி | 160 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் அறிவொளி இருந்தால் அந்த தீபத்திலிருந்து மற்றவர்கள் மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொள்ளட்டும்.

*– கார்ல் மார்க்ஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறுகைத்தொழில் முயற்சிகளுக்கு இந்தியத் தூதரகம் உதவ வேண்டும்!

இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது.

இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் அதனைத் தூக்கி நிறுத்துவார்கள் என்று யாரேனும் நினைத்தால் அதைவிட்ட அறியாமை வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆக, பொதுமக்கள் தனித்தும் கூட்டாகவும் சிந்தித்துச் செயலாற்றுவன் மூலமே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியும்.

அந்தவகையில் தென்பகுதி மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பொருளீட்டுகின்ற முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இதேபோன்று முஸ்லிம் சகோதரர்கள் தமக்கு இருக்கக்கூடிய வர்த்தக முயற்சிகளை ஏற்றுமதி என்ற நிலைக்குக் கொண்டு செல்கின்றனர்.

ஆனால் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் அரசாங்கத்தின் துணையுமின்றி போதுமான முதலீடும் இன்றி வெளிநாடுகளில் இருக்கக்கூடிய உறவுகளின் உதவியில் தங்கி வாழுகின்றவர்களாக இருக்கின்றனர்.

இந்தநிலைமை மிகவும் ஆபத்தானது. வெளிநாட்டில் இருக்கக்கூடிய புலம்பெயர் தமிழ் மக்களின் உதவி தடைப்படுமாயின், வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தின் பொருளாதார நிலைமை அம்போ என்றாகிவிடும்.

எனவே வடக்குக் கிழக்கில் உள்ள வறிய மற்றும் நடுத்தர மக்களின் பொருளாதார நிலைமையைப் பாதுகாக்கும் நோக்கிலும் அவர்களை வேலை செய்யும் படையாக ஆக்குவதற்கும் சிறுகைத்தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க வேண்டிய தேவையுள்ளது.

உண்மையில் சிறுகைத்தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை இந்தியா அதிலும் குறிப்பாக தமிழகம் மிக உன்னதமான நிலையில் இருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

ஆம், ஆலயங்களுக்குத் தேவையான பிரசாதப் பொருட்களான திருநீறு, சந்தனம், குங்குமம், ஊதுபத்தி, பட்டுத்துணிகள் உட்பட கலாசார நிகழ்வுகளுக்கான பொருட்கள் மற்றும் துணிகளிலான மாலைகள், அலங்காரப் பொருட்கள் என ஏகப்பட்ட உற்பத்திகள் தமிழகத்தில் சிறுகைத்தொழில் முயற்சியாக நடந்தாகின்றன.

எனவே அத்தகைய முயற்சிகள் தொடர்பில் நம்மவர்களுக்கு உரிய பயிற்சியும் முதலீட்டு வசதியும் வழங்கப்படுமாயின் நிச்சயம் நம்மவர்களும் சிறுகைத்தொழில் முயற்சிகளில் கோலோச்ச முடியும்.

எனவே இது தொடர்பில் இந்தியத் தூதரகம் போதிய பயிற்சிகளையும் உள்ளீடுகளையும் முதலீட்டு உதவிகளையும் வழங்கி நம் மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# மார்பக புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## நாளொன்றிற்கு 12 பேர் பதிவு

(கொழும்பு)

**இலங்கையில் நாளொன்றுக்கு 12 மார்பக புற்று நோயாளர்கள் பதிவாகி வருவதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தங்களில் மார்பக புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் ஹசரேலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு உள்ளூர் அளவில் மார்பக புற்று நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அடையாளம் காணப்பட்ட நோயாளி களை சிகிச்சைக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## தொடரும் மருந்துத் தட்டுப்பாட்டால் சத்திரசிகிச்சைகளில் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

தொடரும் மருந்து பற்றாக்குறையால் நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

லேடி ரிஜ்வே மருத்துவமனை உட்பட நாட்டின் பிரதான மருத்துவமனைகள் தொடர்ந்தும் அன்டிபயோட்டிக்ஸ் மற்றும் வலி நிவாரணிகள் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன என தெரிவித்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வாசன் ரட்ணசிங்கம் பஞ்சு போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

சில மருத்துவமனைகள் சாதாரண சத்திர கிசிச்சைகள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்துகின்றன என தெரிவித்துள்ள அவர், சில மருத்துவமனைகள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான சத்திர கிசிச்சைகளை மேற்கொள்கின்றன.

மருந்துகள் விநியோக பிரிவில் போதியளவு பொருட்கள் இன்மையே பற்றாக்குறைக்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## வாணி விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வாணி விழா நிகழ்வு நாளை 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இந்து மன்றத் தலைவர் செல்வி கி.துஷானிகா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-7)

## முதலீட்டாளர்கள் இன்றி கிடக்கும் துறைமுக நகரம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரில் முதலீட்டுத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 74 காணி துண்டுகளில் எந்த காணியையும் இதுவரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்யவில்லை என தெரியவருகிறது.

அதில் 6 காணிகளை உள்நாட்டு முதலீட்டு நிறுவனம் ஒன்று கொள்வனவு செய்துள்ள போதிலும் அந்த நிறுவனம் இதுவரை நிர்மாணிப்பு பணிகள் எதனையும் ஆரம்பிக்கவில்லை.

இலங்கையில் காணப்படும் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் கொழும்பு துறைமுக நகர திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கொடுக்கப்படும் அரசியல் அழுத்தங்கள் என்பன இதற்கு பிரதான காரணம் என அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையில் கொழும்பு துறைமுக நகர திட்டத்தின் பணிகள் நிறைவடைந்து, அது சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்து வைக்க மேலும் பல காலம் செல்லும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொன்விழாவானது இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** கட்டுடை, அரசடி, பிப்பிலி சந்தி மானிப்பாய் சீநோர்-படகு படைத்தளம்-காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைகுளம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் [illegible] **மன்னார் பிரதேசத்தில்** இ.சி.பி (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், அகத்தி முறிப்பு, அகத்திமுறிப்புத் திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர்வழுங்கல், ஆத்தி மோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொக்குப் படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர் வழுங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூளாங்குளம், கூளாங்குளம் திட்டம், (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன்வெளி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, பாலைக்குழி, பாலைக் குழி திட்டம், பரிகாரிக்கண் டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, (பண்டார வெளி), பிச்சைகுளம், பிச் சைவாணிபங்குளம் திட் டம், பொன்தீவுகண்டல் கள்ளி மோட்டை புளிய ங் குளம், பொன்னாச்சி குளம், புதுக் காமம் கிராமம், புதுக் குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி திட்டம், சிலாவத்துறை, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி, தம்பட்ட முசலி, வெள்ளி மலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி கால்நடைகளை ஏற்றிய மூவர் கிளிநொச்சியில் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராமநாதபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 22 கால்நடைகளை அனுமதிப்பத்திரம் இன்றி வேறு மாவட்டத்துக்கு ஏற்றிச் செல்ல முற்பட்ட வேளை தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 22 கால்நடைகளும் மீட்கப்பட்டதுடன் மூன்று சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கால்நடைகளை ஏற்றிச் செல்வதற்கான இட வசதி ஏற்படுத்திக் கொடுக்காமை, கால்நடை மருத்துவ அதிகாரியின் மருத்துவ பரிசோதனை சான்றிதழ் இன்மை மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரியின் சான்றிதழ் இல்லாமல் ஏற்றிய குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களிடமும் தருமபுர பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்தார். (4-316)

# அக்கராயனில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நிலவும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்கு உட்பட்ட கோணாவில் யூனியன்குளம், அக்கராயன் மத்தி சுபாஸ்குடியிருப்பு, கெங்காதரன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் குறிப்பிட்ட சில பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அண்மைய நாட்களாக நிலவி வரும் தொடர் வரட்சி காரணமாக குடிநீர்த்தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்றும் தமக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தமது பகுதிகளுக்கான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதேவேளை அண்மைய நாட்களாக நிலவும் கடும் வரட்சி காரணமாக பயன்தரு மரங்கள் பல அழிவடையும் நிலை காணப்படுவதுடன் கால்நடைகளும் குடிநீர் தேடி அலையும் நிலையும் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (4-315)

# கடலட்டை பண்ணைக்கு எதிர்ப்பு மூன்றாவது நாளாகவும் போராட்டம்



(மன்னார்)

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பூநகரி கடற்றொழிலாளர்கள் தமது போராட்ட வடிவத்தை மாற்றியமைத்து நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மூன்றாவது நாளாகவும் போராட்டத்தைமுன்னெடுத்துவருகின்றனர். பூநகரி - கிராஞ்சி இலவன் குடா கடல் பகுதியில் பாரம்பரியமாக சிறகு வலை தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டை பண்ணைஅமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த போராட்டத்தைமுன்னெடுத்துள்ளனர். (4-Digit)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2023 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - 03.10.2022 - 17.10.2022 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - 18.10.2022 பி.ப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - 18.10.2022 பி.ப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம். |

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,430,000.00 | |
| 2 | உடுவில் கீரிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 165,000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 3,256,000.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 56,815.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 197,230.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 148,500.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 71,500.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 27,896,000.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 55,110.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை . | 750.00 | 7,500.00 | 781,440.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 220,000.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 428,990.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 1,520,200.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 198,000.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2022.11.02 ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2022.11.02 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
5. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
6. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
7. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
9. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
10. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
13. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
14. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**க.தர்சுஷன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(C-5005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 மில்.பெறுமதி...

களை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

இதுவரை 03 தடவைகளில், சுகாதார அமைச்சுக்கு மருந்துப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதன் இறுதிக் கட்டமாக இன்னுமொரு தொகை மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நேற்று இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. (4-7)

## யாழ்.பல்கலைக்...

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் வைத்து இலங் கைக்கான சீனத் தூதுவர் சி சென்ஹொங் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவிடம் கையளித்தார்.

2016ஆம் ஆண்டு முதல் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு சீனத் தூதுவரின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நிதியுதவி பங்கிட்டு வழங்கப்பட்டது. 2022ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் கிழக்கு பல்கலைக்கழகத்துக்கும் மட்டுமே முழுத் தொகையும் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது.

சீனத் தூதரகத்தின் இந்த நிதியுதவியின் கீழ் மாணவர்களுக்கான மாதாந்த உதவிப்பணம் உட்பட பல நலனோம்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது. (4-7)

## வாள்வெட்டுக்...

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்டுவந்த கும்பலின் முதன்மை சந்தேகநபர் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாவடியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரிடமிருந்து 3 வாள்கள், மோட்டார் சைக்கிள் என்பன சான்றுப் பொருட்களாக கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் ஐவர் தேடப்படுகின்றனர் என்றும் பொலிஸார் கூறினர்.

மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7,33,104)

## திடீர் சுற்றி...

வடிக்கை எடுக்கப்படுமென்றும், திடீர் சுற்றிவளைப்பு கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கோட்டை பகுதியை நேற்றைய தினம் பார்வையிட்ட மாநகர முதல்வர், அங்கு இடம்பெற்றுவரும் அநாகரிகச் செயற்பாடுகளை கேட்டறிந்து கொண்டதுடன் நேரடியாக அதனைத் அவதானித்தார்.

இதன் பின்னராக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், கோட்டை பகுதிகளில் அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள் இனங் காணப்பட்டால், அவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாண கோட்டை பகுதி சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை மையமாக மாறிவருகிறது. கோட்டை பகுதியை சுற்றியுள்ள பற்றைக்காடுகளை அகற்றுமாறு நீதிபதிகள் யாழ்.மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆகவே கோட்டை பகுதியை சுற்றியுள்ள பற்றைக்காடுகளை உடனடியாக அகற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

யாழ்ப்பாணக் கோட்டை பகுதி தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால் தொல்லியல் திணைக்களத்தினருடன் பேசி இதற்கான நடவடிக்கை எடுக்க உள்ளோம். அவர்களும் இதற்கு சம்மதத்தினை தெரிவித்துள்ளனர் என்றார். (4-7)

## வட மாகாண...

முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை நேற்று இயற்கை எய்தினார்.

ஓய்வுநிலை கிராம சேவையாளரான இவர், ஈழ விடுதலை போராட்டத்திற்கு அரசியல் ரீதியில் பங்களிப்பு வழங்கியதுடன், அரசியல் பணியிலும் ஈடுபட்டார்.

மாரடைப்பு காரணமாக உயிரிழந்த இவருக்கு, பலரும் தமது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். (4,7,100)

## கோணேஸ்வரர்...

பாடல்பெற்ற வரலாற்றுத் தொன்மைவாய்ந்த திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தை தொல்லியல் திணைக்களத்தின் உதவியுடன் பெரும்பான்மை இனம் சார்ந்த வர்த்தகர்களுக்கென வர்த்தக நிலையங்கள் அமைக்கின்ற முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கு ஆலய நிர்வாகமும் சமயத் தலைவர்களும் கடும் எதிர்ப்பும் கண்டனமும் வெளியிட்டதுடன் இந்தியத் தூதுவரைச் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறியிருந்தனர்.

இதுதவிர திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பாதுகாக்க இந்தியா உதவ வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்தியத் தூதுவர் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்ததுடன் ஆலய நிர்வாகிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதுதொடர்பில் கருத்த வெளியிட்ட இந்தியத் தூதுவர்; திருக் கோணேஸ்வரர் ஆலயம் புனிதமானது மட்டுமல்ல, நாயன்மார்களால் பாடல் பெற்ற தலம்.

இந்த ஆலயத்தினுடைய எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும்.

எனவே இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு இந்தியா உதவும் என்றார்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குரிய நிலத்தைக் கபளீகரம் செய்கின்ற சதி வேலை நடந்து கொண்டிருக்கும் இந்தவேளையில், இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அங்கு திடீர் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் அவதானித்தமை இந்து ஆலயங்களை ஆக்கிரமிக்கின்ற இலங்கை ஆட்சியாளர்களின் செயலுக்கு இந்தியா தனது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்ற அதிரடி நடவடிக்கை யென அரசியல் அவதானிகள் பலரும் கருத்துரைத்துள்ளனர். (ந-4,7)

## 2 ஆயிரம்...

குடும்பங்களுக்கு 2000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தலைநகரில் மட்டுமன்றி அரை நகர்ப்புறங்களிலும் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (4-7)

## வீதியால்...

சென்ற ஒருவரின் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை திருட்டுக் கும்பல் ஒன்று அறுத்துக்கொண்டு சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENGLISH ஆங்கிலம்

பிரத்தியேக வகுப்புக்கள்
உங்கள் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்.

**T.P-077 658 9443**
யாழ்ப்பாணம் (12972)

---

விவசாய வேலையாள்

## தேவை

தங்கி நின்று வேலை செய்வதற்கு
ஆண்/பெண் வேலையாள் தேவை.
இடம் : பெரியவிளான் வயது : 45 - 65
பிற்பகல் 3 - 5 மணிவரை தொடர்பு கொள்ளவும் (12962)

**077 191 1539**

---

## வகுப்பு

A/L இரசாயனம்,
O/L கணிதம்
கற்பிக்கப்படும்.

**071 257 9018** (12918)

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE




Visa Extension
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS (C-4921)

**0777-068-777**

---

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12973)

---

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12956)

**076 825 7716** (ஆகாஸ்)

---

## இலவச விசா வாய்ப்பு

### அமெரிக்க லொத்தர் விசா



அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4921)



!!!அவசரம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் ... இரண்டு வாய்ப்புக்கள் | PASSPORT அவசியம்

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

**V2 TRAVELS** 0768226244 0768226240

---

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

# தீபாவளி

## ஜவுளிக் கொண்டாட்டம்





ஆண்கள்
மற்றும் பெண்களுக்கான
தலைசிறந்த ஆடைகள்

திருமணப் பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், Tops, Party Frocks, சல்வார்கள், சல்வார் துணிகள், சேட், T.சேட், சிறுவர், சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்

## இந்தியன் செலக்ஷன்

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம் (C-5006)

காலம் : 01.10.2022 முதல் 25.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

---

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

### பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - ஜெயம் (12965)

**077 814 7389, 077 241 7589**

---

## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

தொடர்ந்து 8 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) என்ற விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இடமிருந்து தொழில் வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

### விற்பனை முகாமையாளர்

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 4 கொடுப்பனவுகள் + மேலும் பல நன்மைகள்.

### உதவி விற்பனை முகாமையாளர்

- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
- ◎ அடிப்படை கொடுப்பனவு 15,000/= + மேலதிக 4 கொடுப்பனவுகள் + மேலும் பல நன்மைகள்.

### நிதி திட்டமிடல் ஆலோசகர்

- ◎ க.பொ.த (சா/த) 6 பாடங்களில் சித்தி. (கணிதம், தமிழ் உட்பட)
- ◎ 4 வகையான கொடுப்பனவுகள் + மேலதிக பல நன்மைகள்.



(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.) (C-5021)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 09.10.2022 இற்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org